*ஜூன் 2, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தைகளே, நினைவில் அமர்ந்திருக்கும் போது உடல் உணர்வை துறந்து விட வேண்டும். இதனால் தான் பாபா கூறுகின்றார்: ஆத்ம உணர்வுடையவர் ஆகுங்கள்! தொடர்ந்தும் உங்களுக்குள் இதை ஆழ பதிவு செய்துக்கொள்ளுங்கள். தெடர்ந்தும், தந்தை, விதை மற்றும் மரத்தை நினைவு செய்யுங்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானக்கடலான தந்தை கற்பிக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு கற்பிப்பது ஓர் மனிதப் பிறவி அல்ல. இதை மிக நன்றாக உறுதியாக்கி கொள்ளுங்கள். நீங்கள் படிக்க வேண்டும்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் "நான் ஓர் ஆத்மா'' என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கிறேன். நான் ஓர் ஆத்மா, எல்லையற்ற தந்தையின் குழந்தை என்பதை மீண்டும் மீண்டும் நினைவு செய்வேன். பாபா எல்லையற்ற மரத்தின் விதை ஆவார். ஞானக்கடல் எனக்கு கற்பிக்கின்றார். சுயத்திற்கும் உலகிற்கும் ஓர் அதிபதியாக என்னை மாற்றுகின்றார்.

**சமார்த்தி அல்லது சக்தி**

*நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.*

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: அனைத்து இரகசியங்களின் முக்கியத்துவத்தை புரிந்துகொண்டு பற்றற்றும் அன்பானவராகவும் இருப்பதன் முக்கியத்துவத்தை தெரிந்து திருப்தியாக இருக்கும் ஒருவராக இருப்பீர்களாக.

நான் திருப்தி என்னும் மனோபாவத்தை ஏற்றுக்கொள்வேன். திருப்தியின் இரகசியங்களை புரிந்து கொள்வதற்கு, நான் பாபாவைப் போல் அன்பாகவும் பற்றற்று விலகியும் இருப்பேன். நான் திருப்தி என்னும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ளும்போது, பாபா என்னை குறித்து மகிழ்ச்சியாக இருப்பார். பாபாவை மகிழ்விப்பது எனக்கு அன்பாக மற்றும் பற்றற்று இருக்கும் விவேகத்தை கொடுக்கின்றது.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: இந்த மறைமுகமான பொக்கிஷம் உன்னுடைய எதிர்காலத்திற்கானதாகும். நீங்கள் அமரத்துவ பூமிக்காக படித்துக்கொண்டிருக்கின்றீர்கள். இந்த மரண பூமிக்காக அல்ல. நம் ஆன்மீக பாபா நமக்கு கற்பிக்கின்றார். இந்த துன்ப உலகம் இப்போது மாற்ற வேண்டும்.

தங்க யுகம் மகிழ்ச்சியான உலகமாகும்.

**என்னுடைய தெய்வீக திருஷ்டியினால், நான் அமரத்துவ பூமியையும் தங்கயுகத்தையும் பார்க்கிறேன். நான் இந்த துன்ப பூமியை பார்க்கும்போதும் தங்கயுகத்தை தெளிவாக பார்க்கும் திறனை வளர்த்துக்கொள்கின்றேன். நான் நடக்கும்போதும் உலாவும் போதும் என்னுடைய திருஷ்டியில் இந்த மறைக்கப்பட்ட புதையலை பாதுகாத்து வைத்திருப்பேன்.**

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*